மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்]

(2) அமைச்சர் அறிக்கை

முன்னாள் முதலமைச்சர் திரு. எம். பக்தவத்சலம் பத்திரிகைக்கு அளித்த செய்தி குறித்து முதலமைச்சரின் அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இப்பொழுது 82-வது விதியின் கீழ் இப் பேரவைக்கு ஒரு அறிக்கை அளிப்பார்.

THIRU K. T. K. THANGAMANI : I have written a letter to the Hon. Chief Minister with a copy to you, Sir. There are three or four issues which are now being commented in the Press. One is concerned with Hon. Chief Minister and other Ministers also. When the Hon. Chief Minister makes his statement under Rule 82, if he could touch upon those points also, it will be better.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பேரவைத் தலைவரவர்களே, 30-3-1972-ஆம் நாள் சட்டப் பேரவையில் நிதி ஒதுக்கீடு மசோதாவில் பேசும்போது திருவண்ணாமலை நகரத்தில் 1965-ஆம் ஆண்டு நடைபெற்ற அமளியில் தி.மு. கழகத்தினர் நாற்பத்தி எட்டுப் பேரும், காங்கிரஸ் கட்சியினர் இருபது பேரும் கைது செய்யப்பட்டு வழக்குப் போடப்பட்டதென்றும். அன்றைய முதலமைச்சர் பக்தவச்சலம் அவர்களின் உத்திரவுப்படி காங்கிரஸ்காரர்கள் மீது மட்டும் வழக்குகள் வாபஸ் பெறப்பட்டு, கழகத்தினர்கள் வழக்கில் தண்டிக்கப்பட்டார்கள் என்றும் குறிப்பிட்டேன்.

அத்துடன் திரு. பக்தவத்சலம் அவர்கள் அமைச்சராக இருந்த போதே அவரது குடும்பத்தில் நில உச்ச வரம்புச் சட்டக் கொள்கைக்கு மாறாக அந்தச் சட்டம் அறிவிக்கப்பட்ட பிறகு

1972 ஏப்ரல் 3]

[டாக்டர் மு. கருணாநிதி]

commencement of the Act 6-4-1972 முதல் Notified date 2-10-1962 வரையில் 137 (நூற்றி முப்பத்து ஏழு) ஸ்டாண்டர்டு ஏக்கரா நிலங்களை திரு. பக்தவத்சலத்தின் மகள் திருமதி சரோஜினியின் கணவர் திரு. வரதப்பன், நாற்பத்து ஏழு பேர்களிடம் விற்றுவிட்டார் என்றும், திருமதி சரோஜினியின் பெயரில் நிலமிருந்தால் அது கணவன் கணக்கில் சேர்ந்து உச்ச வரம்புச் சட்டப்படி உபரி நிலமாகி விடக்கூடும், அந்த நிலங்கள் 27 ஏக்கராக்கள் 8-12-1959-லும், 4-4-1960-லும் விற்கப்பட்டுவிட்டன என்றும் கூறினேன். நிலச் சீர்திருத்தக் கொள்கையை வகுத்த அமைச்சர் குடும்பத்திலேயே அந்தக் கொள்கைக்கு எதிராக நடைபெற்ற காரியத்தை நான் குறிப்பிட்டதற்குப் பதிலாக திரு. பக்தவத்சலம் அவர்கள் ஆத்திரத்துடன் பத்திரிகைகளில் அறிக்கைவிட்டிருக்கிறார்.

அதுபற்றி விபரம் தர விரும்புகிறேன். திருவண்ணாமலையில் காங்கிரஸ்காரர்கள், கழகத்துக்காரர்கள் இருதரப்பினர் மீதும் வழக்குத் தொடரப்பட்டது. காங்கிரஸ் கட்சியினர் மீது போடப்பட்ட வழக்கைத் திரும்பப் பெற வேண்டுமென்று அந்தக் கட்சியைச் சேர்ந்த திரு. அண்ணாமலைப்பிள்ளை, திரு. ஆறுமுகம் எம்.எல்.ஏ., இருவரும் திரு. பக்தவத்சலம் அவர்களிடம் மனுக் கொடுத்தார்கள். அந்த மனுவின் அடிப்படையில் காங்கிரஸ் கட்சியினர் மீது போடப்பட்ட வழக்கை மட்டும் முதல்வர் பக்தவத்சலம் உத்திரவின் பேரில் திரும்பப் பெற்றுள்ளார்கள். கழகத்தினர் தண்டிக்கப்பட்டார்கள். தலைமைச் செயலகத்திலிருந்து வடஆற்காடு மாவட்ட ஆட்சித் தலைவருக்குக் கீழ்கண்ட உத்திரவு சென்றது.

Copy of the D.O. No. 813/65-1, dated 18th February 1965, Public (General-A) Department from Thiru C. Ramachandran, I.A.S., Under Secretary to Government, Madras-9, addressed to the Collector of North Arcot, Vellore-5.

Subject.—Law and Order—North Arcot District—Thiruvannamalai Anti-Hindi Agitation—Violation of orders under Section 144 Cr.P.C.

[டாக்டர் மு. கருணாநிதி]

I enclose herewith a copy of the representation, dated 16th February 1965 addressed to the Chief Minister by Sri D. Annamalai Pillai, President, District Congress Committee and Sri A. Arumugam, M.L.A., Tirunvannamalai. In the circumstances stated therein, the Chief Minister desires that they need not be proceeded against. Please acknowledge the receipt of this D.O. and intimate the result of the action taken.

Yours sincerely,
(Signed) C. Ramachandran.

இதன்படிதான் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

அடுத்ததாக, அரசின் உச்சவரம்புச் சட்டக் கொள்கைக்கு எதிராக திரு. பக்தவத்சலம் குடும்பத்திலேயே நடைபெற்ற காரியத்தைச் சொன்னதற்கு அவர் என்னைப் பற்றிக் குறிப்பிட்டு எனக்கிருந்த நிலங்களை உச்ச வரம்பை ஏமாற்றுவதற்காக விற்று விட்டதாகக் கூறியிருக்கிறார். என்மீது மாசு கற்பிக்கும் வண்ணம் அவர் குற்றஞ்சாட்டிவிட்டு அதனை விசாரித்துச் சொல்வதாகவும் குறிப்பிட்டிருக்கிறார். பதிலுக்குப் பதில் குற்றம் சாட்டிவிட்டதாக திரு. பக்தவத்சலம் மகிழ்ச்சி அடையலாம். ஆனால் பொறுப்பு மிக்க ஒருவர் தவறான தகவலை நாட்டு மக்களிடம் தந்துவிட்டது முறையல்ல. எனக்குள்ள நிலம் எவ்வளவு என்ற விபரங்களை 1967-ஆம் ஆண்டு முதல் இந்த மன்றத்தில் வைக்கப்பட்டுள்ள சொத்து விபரங்களில் காட்டியுள்ளேன். என் குடும்பத்திற்கு எந்தக் காலத்திலும் உச்சவரம்புக்கு மேல் நிலம் இருந்ததும் இல்லை. உச்ச வரம்பு என்ற சோஷலிசக் கொள்கைக்கு மாறாக அவைகளை விற்க வேண்டிய அவசியமும் எனக்கு இல்லை. அப்படி விற்கவும் இல்லை. திரு பக்தவத்சலத்தின் கூற்று உண்மைக்கு மாறானது, வேண்டுமென்றே புனைந்துரைக்கப்பட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனக்கும் என் பிள்ளைகளுக்கும் இருக்கும் நிலங்கள் 8-4-1953-ஆம் நாள் வாங்கப்பட்டது. நஞ்சை சுமார் 14¾ சாதாரண ஏக்கர் புஞ்சை சுமார் 3¾ சாதாரண ஏக்கர். இந்த நிலங்கள் ஸ்டாண்டர்டு ஏக்கர் கணக்கில் சுமார் 13 ஸ்டாண்டர்டு ஏக்கர்தான் வரும் என்பதையும் அறிவித்துக் கொள்கிறேன்.

1972 ஏப்ரல் 3]

[டாக்டர் மு. கருணாநிதி]

திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் அதோடு லாரி சம்பந்த மாகவும் கள்ளநோட்டு சம்பந்தமாகவும் உணவு அமைச்சர் அவர்களைச் சம்பந்தப்படுத்தி பல பத்திரிகைகளில் வந்த செய்திகளைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். அது சம்பந்தமாக அந்தப் பத்திரிகைகள் மீதும், அந்த விபரங்களை அளித்தவர்கள் மீதும் வழக்குப் பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

கூட்டுறவு அமைச்சர் அவர்களைப் பற்றிச் சொன்னார்கள். அவர்களைப்பற்றிச் சாட்டப்பட்ட குற்றச்சாட்டுக்கு இந்தச் சபையில் கூட்டுறவு அமைச்சர் அவர்கள் விளக்கம் தந்து இருக்கிறார்கள்.

(3) அறிவிப்புகள்.

(அ) உறுப்பினர்கள் இடங்களில் இல்லாமையால் கவன ஈர்ப்பு அறிவிப்புகள் எடுத்துக் கொள்ளப்படாதது குறித்து

MR. SPEAKER: Now the hon. Member Thiru A. C. Narasimhan will call the attention of the Hon. Minister for Industries.

The hon. Member is not here. So the call attention notice is deemed to have been withdrawn.

Similarly the hon. Member Thiru B. Venkataswamy who has given a call-attention notice to invite the attention of the Hon. Minister for Electricity, is not in his seat. So his call-attention notice also is deemed to have been withdrawn.

(4) அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) தமிழ்நாடு, 1972-ம் ஆண்டு, நிலச் சீர்திருத்த (நிலவுடைமைக்கு உச்ச வரம்பு வரையறுத்தல்) மூன்றும் திருத்த சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1972-ம் ஆண்டு, நிலச் சீர்திருத்த (நிலவுடைமைக்கு உச்ச வரம்பு வரையறுத்தல்) மூன்றும் திருத்தச் சட்ட முன்டிவை இப் பேரவையின் முன் அறிமுகப் படுத்த அனுமதி கோருகிறேன்.